ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ா ஹ்ரு'தி₃ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ திருவாசிரியம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to **Smt. Vasundara Ramarajan** for proofreading the entire document.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருவாசிரியம் ॥

அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்த தனியன்

காசினியோர் தாம் வாழக் கலியுகத்தே வந்துதித்து⋆
ஆசிரியப் பாவதனால் அரு மறை நூல் விரித்தானை⋆
தேசிகனைப் பராங்குசனைத் திகழ் வகுளத் தாரானை⋆
மாசடையா மனத்து வைத்து மறவாமல் வாழ்த்துதுமே

‡செக்கர் மா முகில் உடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதி சூடி⋆ அஞ்சுடர் மதியம் பூண்டு⋆
பல சுடர் புனைந்த பவளச் செவ்வாய்⋆
திகழ் பசுஞ்சோதி மரதகக் குன்றம்⋆
கடலோன் கைம்மிசைக் கண்வளர்வது போல்⋆
பீதகவாடை முடி பூண் முதலா⋆
மேதகு பல் கலன் அணிந்து⋆ சோதி
வாயவும் கண்ணவும் சிவப்ப⋆ மீதிட்டுப்
பச்சை மேனி மிகப் பகைப்ப⋆
நச்சு வினைக் கவர்தலை அரவின் அமளியேறி⋆
எறி கடல் நடுவுள் அறி துயில் அமர்ந்து⋆
சிவன் அயன் இந்திரன் இவர் முதல் அனைத்தோர்⋆
தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த⋆
தாமரை உந்தித் தனிப் பெரு நாயக⋆
மூவுலகளந்த சேவடி யோயே! (1)

உலகு படைத்துண்ட எந்தை⋆ அறை கழல்
சுடர்ப் பூந் தாமரை சூடுதற்கு⋆ அவாவா-
ருயிர் உருகி உக்க⋆ நேரிய காதல்
அன்பில் இன்பீன் தேறல்⋆ அமுத
வெள்ளத்தானாம் சிறப்பு விட்டு⋆ ஒரு பொருட்கசைவோர்
அசைக⋆ திருவொடு மருவிய

www.prapatti.com

இயற்கை⋆ மாயாப் பெருவிறல் உலகம்
மூன்றினொடு நல்வீடு பெறினும்⋆
கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே (2)

குறிப்பில் கொண்டு நெறிப்பட⋆ உலகம்
மூன்றுடன் வணங்கு தோன்று புகழ் ஆணை⋆
மெய் பெற நடாய தெய்வம் மூவரில்
முதல்வன் ஆகி⋆ சுடர் விளங்க கலத்து⋆
வரை புரை திரை பொரு பெரு வரை வெருவர⋆
உருமுரல் ஒலி மலி நளிர் கடல் படவர-
வரசு⋆ உடல் தட வரை சுழற்றிய⋆ தனிமாத்
தெய்வத்தடியவர்க்கினி நாம் ஆளாகவே
இசையுங்கொல்⋆ ஊழிதோறூழி ஓவாதே (3)

ஊழிதோறூழி ஓவாது⋆ வாழிய
என்று யாம் தொழ இசையுங்கொல்⋆
யாவகை உலகமும் யாவரும் இல்லா⋆
மேல் வரும் பெரும்பாழ்க் காலத்து⋆ இரும் பொருட்-
கெல்லாம் அரும் பெறல் தனி வித்து⋆ ஒரு தான்
ஆகித் தெய்வ நான்முகக் கொழு முளை
ஈன்று⋆ முக்கண் ஈசனொடு தேவு பல
நுதலி⋆ மூவுலகம் விளைத்த உந்தி⋆
மாயக் கடவுள் மா முதல் அடியே (4)

மா முதல் அடிப் போதொன்று கவிழ்த்தலர்த்தி⋆
மண் முழுதும் அகப்படுத்து⋆ ஒண் சுடர் அடிப் போது
ஒன்று விண் செலீ இ⋆ நான்முகப் புத்தேள்
நாடு வியந்துவப்ப⋆ வானவர் முறை முறை
வழி பட நெறீ இ⋆ தாமரைக் காடு
மலர்க் கண்ணொடு கனி வாய் உடையது-
மாய்⋆ இரு நாயிறாயிரம் மலர்ந்தன்ன⋆
கற்பகக் காவு பற்பல வன்ன⋆
முடி தோள் ஆயிரம் தழைத்த⋆
நெடியோய்க்கல்லதும் அடியதோ உலகே (5)

ஓஒ! உலகினதியல்வே⋆ ஈன்றோள் இருக்க
மணை நீராட்டி⋆ படைத்திடந்துண்டுமிழ்ந்-
தளந்து⋆ தேர்ந்துலகளிக்கும் முதற் பெரும்
கடவுள் நிற்ப⋆ புடைப் பல தான் அறி
தெய்வம் பேணுதல்⋆ தனாது
புல்லறி வாண்மை பொருந்தக் காட்டி⋆
கொல்வன முதலா அல்லன முயலும்⋆
இனைய செய்கை இன்பு துன்பளி⋆
தொல் மா மாயப் பிறவியுள் நீங்காப்⋆
பல் மா மாயத்தழுந்துமா நளிர்ந்தே (6)

‡நளிர் மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்⋆
தளிர் ஒளி இமையவர் தலைவனும் முதலா⋆
யாவகை உலகமும் யாவரும் அகப்பட⋆
நிலம் நீர் தீ கால் சுடர் இரு விசும்பும்⋆
மலர் சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க⋆
ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதும்
அகப்படக் கரந்து⋆ ஓர் ஆல் இலைச் சேர்ந்த எம்
பெரு மா மாயனை அல்லது⋆
ஒரு மா தெய்வம் மற்றுடையமோ யாமே (7)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com